
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :25 January 2025*
கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்
தெ.மதுபாலா

தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்
கோ. கோகிலா

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்
முனைவர்.வி.சேகர்

ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு
கோ. கோகிலா

ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்
த.கல்பனா

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்
கு.கலையரசி

ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்
மு.கௌசல்யா

சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்
முனைவர் வெ. நளினி

பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்
வீ. மஞ்சு

குறுநில மன்னா ்களின் பொருளாதாரநிலை
மு. சதீஸ்குமார்

கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்
மு.கனகவள்ளி

காப்பியங்களில் மரபுக்கருவிகள்
வீ.விஜயலட்சுமி


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்**
முனைவர் சா.இன்குலாப்

**தேவிபாரதியின் "உயிர்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு**
S.Priyadharshini

**விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை**
முனைவர் கு.புஷ்பாவதி

**அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.**
திரு.கு.ரவிச்சந்திரன்

**பாரதிதாசனின் பெண்ணுலகம்**
கா. கவிதா

**பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்**
நா.ரஹமத் நிஷா

**“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை**
மு. வசந்தி

**நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்**
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

**கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி**
நா.சௌந்தர்யா

**Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks**
1.Yasanthini, G.F


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்

முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

Lakśana and Lakśya in Music

Srivaramangai Sadagopan

சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்

ச. காயத்ரி தேவி

Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions

Ms. Janaki Sadagopan

தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு

கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து

கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்

திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை

பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்


அட்டைப்படம் உதவி

இணையம்

நன்றி


தமிழ்

# பாரதிதாசனின் பெண்ணுலகம்

## (Bharathidasan's women's world)

**ஆய்வாளர்**
**திருமதி கா. கவிதா,**
முதுகலை தமிழ் இலக்கியம்
இரண்டாம் ஆண்டு,
சக்தி மகளிர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம்.

**நெறியாளர்**
**முனைவர் சொ. கோகிலமீனா,**
M.A.,M.Phil., B.Ed., Ph.D.,
தமிழ்த்துறைத் தலைவர்(பொ) மற்றும்
உதவிப்பேராசிரியர்,அறிவியல் கல்லூரி,
சக்தி மகளிர் கலை மற்றும் ஒட்டன்சத்திரம்.

**ஆய்வு சுருக்கம்**

பாரதிதாசன் கண்ட பெண் அறிவார்ந்தவளாகவும், சிந்தனைத்திறம் கொண்டவளாகவும் விளங்குவதை எடுத்துரைக்கின்து. பெண் அடிமை இல்லை என்பதையும், அவள் உரிமை பெற வேண்டியவள் என்பதையும் உணர்த்துகின்றது. வாள் ஏந்திப் போரிடவும் அவள் தக்கவளே என்பதைக் காட்டுகிறது. ஆணுக்கு அறிவை ஊட்டுகின்றவளாக பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

**திறவுச் சொற்கள்**

**பாரதிதாசன், பெண் கல்வி, ஆணாதிக்கம், புரட்சி,பெண்ணடிமை**

**முன்னுரை**

ஆண், பெண் என்ற இருபாலர்களும் உலக வாழ்வின் இயக்கத்திற்கு இன்றியமையாதன. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்வின் நிறைவிலேயே வையம் சிறக்கின்றது. வண்டிக்கு இருபுறம் அமைந்த சக்கரங்கள், மனித உடம்பிற்கு இரண்டு கால்கள். வானவெளிக்குக் கதிர் நிலவு என இரண்டு சுடர்கள், இப்படி சமமாக அமைந்த இரட்டைப் பொருள்களாக வாழ்க்கைக்கு ஆண், பெண் அமைகின்றனர். ஆனால் ஆணாதிக்கப் பிடியில் பெண் உரிமை இழந்தாள். சமைப்பது, பிள்ளை பெறுவது என்பனவே அவள் கடமைகள். குணவனின் கொடுமைகளையெல்லாம் தாங்கினாள் பெண் சித்தரவதைப்பட்டாள், ஆமையாய், ஊமையாய் பெண்கள் வாழ்ந்தனர். அவளுக்கு எதிராகவே சாத்திரங்கள், புராணங்கள் எல்லாம் எழுந்தன. "வரதட்சணை" என்ற கொடுமையில் அவள் திருமணப்பந்தலை அணுகமுடியாதவளாக இருந்தாள். நம் புதிய உலகின் சடங்குகளுடன் தொடக்கத்தில் அவளுக்குச் சொத்துரிமை தரவில்லை. ஆண் குழந்தை என்றால் அகமகிழும் சமுதாயம், பெண் குழந்தை பிறந்தவுடன் தாய்ப்பப்பாலுக்கு பதிலாக எருக்கம் பாலிட்டு கொலை செய்யப்பட்டது. இந்த கொடுமைகளை எதிர்த்து சீர்திருத்தக் குரல் முழங்கியவர் சிலர். அந்தச் சிலரில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்குப் பெரும்பங்குண்டு. தமிழ்ச் சமுதாயத்தில் இன்று பெண் தலை நிமிர்ந்து இருப்பதற்கு அவர் எழுதுகோல் தலை

குனிந்து பணியாற்றியதே பெரிய காரணமாகும். அவர் கண்ட பெண்ணுலகம் எத்தகையது என்பதை இக் கட்டுரையில் காணலாம்.

**பாரதிதாசன் கண்ட பெண்**

நாக்கை துருத்திக் கொண்டு, கண்களை உருட்டி, விழித்தபடிச் செக்க செவேர் என்று கையில் போர்க்கருவி ஏந்தி நிற்கும் காளிதேவியை பாருங்கள். பக்தர்கள் இவருக்கு படையிடும் சிறப்பும், பூக்குழி என்று கூறி நெருப்புக் கட்டிகளில் பாதம் பதிய நடக்கும் பணிவு பாருங்கள். இவளுக்குச் சக்தி என்று பெயர். கடவுள்களில் பெண் கடவுள்களுக்கு சக்தி இல்லாமல் போய்விட்டது. எனினும் அவ்வப்போது மாதர் திலகங்கள் நாடாண்டனர்; வாளேந்திப் போர் செய்தனர்; விண்ணேறிப் பாய்ந்தனர்; கோள்களைத் தொட்டனர் என்றாலும், இவற்றையெல்லாம் விதிவிலக்கு என்று கருதியறு உலகம். பாரதியார் பட்டங்களை ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடந்து வந்தோம் என்று, பெண்களை உரிமை மிக்கவர்களாகப் படைத்தார். பாரதிதாசன் பெண்களுக்குப் புரட்சி செய்யத் தூண்டினார்.

**“பெண் ஆண் என்ற**

**இரண்டு உருளையில் நடக்கும் இன்பவாழ்க்கை”** (பெண்களைப் பற்றி பெர்னாட்ஷா 29)

என்று கூறி ஆண், பெண் சமம் என்றார். பெண் விடுதலை பெறாத வரையில் நாடு விடுதலை பெற முடியாது என்று கவிஞர் கருதினார். நாட்டின் மக்கள் தொகையில் பாதியாய் உள்ள பெண்கள் சேர்ந்து முடியாமல் நாட்டு விடுதலையை எப்படி ஈட்ட முடியும்?

**“பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும் தருநாட்டு**

**மண்ணடிமை தீர்ந்துவரல் முயற் கொம்பே”** (சஞ்.ப.சா.தொ-**1)**

என்றார். முயலுக்குக் கொம்பு உண்டோ? அதுபோலத்தான் நாட்டு விடுதலையும் இல்லை என்று ஆகிவிடும் எனக் கருதுகிறார். “பெண்கள் சிரித்தாலே போயிற்று எல்லாம்” என்று பழமொழி கண்டதல்லவா நம் உலகம். அவள் சிரிக்கக் கூடாது, அதிகபட்சம் புன்னகைக்கலாம்; அதுவும் மித நெருங்கிய உறவினர்களிடம் அவள் குனிந்த தலை நிமிராமல் இருந்தால் சிறப்பு. இதோ! பாரதிதாசன் இரண்டு வகைப் பெண்களைப் படைக்கின்றார். அதோ.. ஒரு பெரிய மலையைக் காணுங்கள், அதுதான் சஞ்சீவி பர்வதம். அங்கே குப்பன் என்பவன் வந்து நிற்கிறான், குப்பனுடைய காதலி குப்பனிடம் கூறுகிறாள். "மலையின் உச்சியில் உள்ள மூலிகை வேண்டும், போய்ப் பறித்து வாருங்கள்" என்கிறாள். குப்பன் மலைக்கிறான். இவ்வளவு பெரிய மலையின் உச்சியை எப்படி அடைவது என்று எண்ணுகிறான். அவன் மலைப்பாதை கண்டு சிரித்து விட்டான். அவ்வளவுதான். குப்பன் காதலியையும் தூக்கிக் கொண்டு மலையின் மீது தாவினான், பறந்தான். எப்படி முடிந்தது அவனால்?கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்

மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம் என்கிறார். பெண் மற்றவர்களை இயக்கும் சக்தியாகத் திகழ்வதை அறிய முடிகிறது. பாரதிதாசனின் தமிழச்சியின் கத்தியில்,

**“கத்தியை நீட்டினாள், என்னை வாட்டினும்**
**கையைத் தொடாதேயடா - இந்த**
**முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதன்றி**
**மூச்சுப் பெரிதில்லை காண்.”** *(தமிழச்சியின் கத்தி-20)*

என்று வீர மற உணர்வனோடு கூறுகின்றாள். தேவைப்பட்டால் தானே இயங்கவும் செய்வாள் என்பதற்கு கவிஞர் படைத்துக் காட்டும் எடுத்துக்காட்டு இது.

**பகுத்தறிவுப் பெண்**

புரட்சி கவிஞரின் கவிதைகளில் பெண் மூடப் பழக்கங்கள் ஏற்காதவள். பெண்ணுரிமையை மற்றவர்கள் தரும் வகையில் அவள் காத்திருப்பதில்லை, என்பதை சோலையிலே நிற்கின்றாள் அந்த அழகுமயில், செல்வப் பிள்ளை ஒருவன் அவளைக் கண்டு விழிகளில் அள்ளினான். அருகில் வந்தான். தன் கன்னத்தில் முத்தமொன்று கேட்டான். படித்திருக்கின்றாயா? என்று அவன் கேட்டான். படித்திருக்கின்றீரா? ஏன்று அவள் கேட்டாள். பலநுநூல் படித்த பண்டிதன் நான் என்றான். அவன் அப்படியானால் பெண்ணுக்கு உரிமையுண்டோ? என்று கேட்டான். கொடுத்தால் பெற்றுக் கொள்வதுதான் அறம் என்றான். அவன் நானே எடுத்துக் கொண்டால் என்ன என்று கேட்டு அவனை மடக்கினான். அதனோடு விட்டாளா அவள், இல்லை இல்லை. அவன் அவளை நெருங்க முற்பட்டபோது வாளை உருவினாள், ஓடிப்போ என்று விரலால் குறிப்புக் காட்டினாள். ஓடினான் ஓடினான் வாழ்க்கையின் ஓரத்திற்கே அவன் ஓடினான்.

**“செல்வப் பிள்ளையே இன்று புவியில் பெண்கள்**
**சிறுநிலையில் இருக்க வில்லை, விழித்துக் கொண்டார்?”**

*(பாரதிதாசன் கவிதைகள் : முதல் தொகுதி)*

என்று கூறிக் கவிஞர் மதிக்கிறார். இப்படிப்பட்ட பெண் பிறந்தபோது அவளைத் தாலாட்டும் கவிஞர் மொழி கேளுங்கள்.

**“மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற**
**காடு மணங்கவரும் கற்பூரப் பெட்டகமே.”**
*(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி)*

கற்பூரம் வைத்திருந்த பெட்டியைத் திறந்தவுடன், காடு முழுவதும் மணப்பது போல் இந்த சமுதாயம் முழுவதும் அவள் புகழ் பரப்பப் பிறந்திருக்கிறாள். இப்படிப்பட்ட பகுத்தறிவுச் சுடராகப் பாரதிதாசனின் பெண் திகழ்கின்றாள்.

**செயல் திறன் வாய்ந்த பெண்**

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்றார்.... கவிஞர்! அந்த பல்கலைக் கழகத்தின் மைய அச்சுப் பெண்தான். பழைய நூல்கள் பெண் என்பவள், தாதியாக, தாயாக, அமைச்சராக, மனைவியாக வெவ்வேறு பொறுப்புகளில் கணவனுக்குப் பணி செய்வதாகக் கண்டன. ஆனால், புரட்சி கவிஞன் படைத்த பெண் தன் வீடு, தன் குடும்பம், தன் பிள்ளைகள் என்று பாராமல் நாடு, மொழி ஆகியவற்றுக்கும் தொண்டு செய்யும் தகைமை வாய்ந்தவளாகத் திகழ்கிறாள். வாழ்க்கையில் உயர் குறிக்கோள் வேண்டும் என்பதை இந்தப் பகுதி எடுத்துரைக்கின்றது.

**மொழிப்பற்றுள்ள பெண்**

பால் கணக்கு, தயிர் கணக்கு, வைத்துக் கொள்ளும் அளவு கணக்கறிவும், எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்த அளவு பொண்ணுக்குப் போதும் என்ற கருத்தியிலிருந்தது பழைய உலகம். கல்வி இல்லாத நிலம் அங்கு புல் விளையலாம். நல்ல புதல்வர் விளைய மாட்டார்கள். கல்வி வல்லாராய் பெண்கள் திகழ வேண்டும் தாய்மொழி கல்வியைப் பெண்கள் பெறுதல் வேண்டும்.

**"இந்தப் பழம்புகழ் மீள வேண்டும் நாட்டில்**
**எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும்**
**வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருக வேண்டும்**
**மாற்றலர்கள் ஏமாற்றம் தொலைய வேண்டும்."**

(குடும்ப விளக்கு : முதல் தொகுதி)

தமிழ் கல்வி இன்றியமையாதது என்று எடுத்துரைக்கின்றார்.

**முடிவுரை**

ஆண், பெண் என்ற பாகுபாடு இயற்கையில் அமைந்தது. இருவேறு பாலினம் ஒன்றுவதில்தான் உலக இயக்கம் இருக்கிறது. ஆண், பெண் இருவரும் குடும்பக் கடமைகளையும், சமுதாயக் கடமைகளையும் ஆற்ற வேண்டும். இயற்கை வகுத்த பால் வேறுபாடு தவிர இருவருடைய வேறு வேற்றுமைகள் தோன்றிருக்கத் தேவையில்லை. ஆனால், மிக பழங்காலத்திலிருந்து பல சமூக அமைப்புகளிலும் ஆண் ஆதிக்கம் மிக்கவனாகவும், பெண் அவனுக்கு அடங்கி வாழ்பவளாகவும் இருக்கும் நிலை உள்ளது. பெண் பிறப்பு மதிப்பு குறைந்தாக கருதப்படும் நிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னும் அளவற்ற கட்டுப்பாடுகளுக்குள் வாழ வேண்டிய சூழல், தனித்து இயங்க முடியாத வாழ்க்கைப் போக்கு ஆகியவற்றால் பெண்களின் வாழ்வியல் நலிந்து, அவ்வப்போது சீர்திருத்தவாதிகள் தோன்றி பெண்ணுலகு உரிமை பெறக் குரல் கொடுத்தனர். தமிழ் சமுதயாத்தில் கலைஞர் பாரதிதாசன் பெண்களின் விடுதலைக்காக பெரிதும் பாடுபட்டார். நம்

படைப்புகள் அனைத்தும் புரட்சி உள்ளமும், செயல்திறனும் கொண்ட பெண்களை படைத்தார். "இந்தியாவிற்கு விடுதலை வேண்டும் என்கின்றீரா? அப்படியானால் முதலில் பெண்ணுக்கு விடுதலை கொடுங்கள்" என்று கூறுகிறார்.

**ஆய்வுக்கு துணை நின்ற நூல்கள்**


*1.பாரதிதாசன் பாடல்கள், மாலை பப்ளிகேஷன்ஸ், சென்னை.*

*2.பாரதிதாசன் கவிதைகள் - 1, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திராபுரம், திருச்சி*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com